பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை – 4

24 06 2024 12 40

திங்கட்கிழமை பிற்பகல்

தலைப்புச் செய்திகள் -

1. 18-வது மக்களவையின் முதல் கூட்டத்தொடர் இன்று தொடங்கியது.

   பிரதமர் திரு நரேந்திரமோடி மக்களவை உறுப்பினராக பதவியேற்றுக் கொண்டார்.

2. நாடாளுமன்ற கூட்டத்தொடர் சுமூகமாக நடைபெற அனைத்து கட்சிகளும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென்று பிரதமர் வேண்டுகோள் விடுத்துள்ளார்,

3. பாஸ்போர்ட்டுகளை எளிதாக பெறும் வசதி 440 தபால் நிலையங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

4. தமிழகத்தில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் சாலை மேம்பாட்டுப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

5. உலகக்கோப்பை டுவெண்ட்டி - டுவெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் சூப்பர்-எட்டு சுற்றில் இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

*----- இனி விரிவான செய்திகள் ---*

**[]<<<>>>[]**

18-வது மக்களவையின் முதல் கூட்டத்தொடர் இன்று தொடங்கியது.

பிரதமர் திரு நரேந்திரமோடி மக்களவை உறுப்பினராக பதவியேற்றுக் கொண்டார்.

அவருக்கு இடைக்கால அவைத் தலைவர் திரு **Bhartruhari Mahtab** பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

பிரதமரைத் தொடர்ந்து மத்திய அமைச்சர்கள் திரு ராஜ்நாத்சிங், திரு அமித்ஷா உள்ளிட்டோர் பதவியேற்றுக் கொண்டனர்,

முன்னதாக இடைக்கால மக்களவைத் தலைவர் திரு **Bhartruhari Mahtab** –க்கு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று காலை குடியரசுத் தலைவர் மாளிகையில் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

தொடர்ந்து மாலை வரை உறுப்பினர்கள் பதவியேற்றுக் கொள்கின்றனர்.

நாளையும் உறுப்பினர்கள் பதவியேற்பு நிகழ்ச்சி நடைபெறும்,

மக்களவை தலைவர் பதவிக்கான தேர்தல் நாளை மறுநாள் நடைபெறுகிறது.

வரும் வியாழக்கிழமை நடைபெறும் இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு உரையாற்றவுள்ளார்.

[]<<<>>>[]

நாடாளுமன்ற கூட்டத்தொடர் சுமூகமாக நடைபெற அனைத்து கட்சிகளும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென்று பிரதமர் திரு நரேந்திரமோடி வேண்டுகோள் விடுத்துள்ளார்,

மக்களவைக் கூட்டத்தொடரில் பங்கேற்க வந்த பிரதமர், நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசினார்.

18-வது மக்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அனைவரையும் தாம் வரவேற்பதாகக் கூறினார்.

நாடாளுமன்றத்தின் கண்ணியத்தை காக்கும் வகையில் உறுப்பினர்கள் செயல்பட வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார்.

சாமானிய மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் விதத்தில் உறுப்பினர்கள் பணியாற்ற வேண்டுமென்றும் திரு நரேந்திரமோடி வலியுறுத்தினார்.

[]<<<>>>[]

இதனிடையே நாடாளுமன்ற கூட்டத்தொடரில் பங்கேற்க வந்த ஒருங்கியைந்த எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் கைகளில் அரசியல் சாசன புத்தகத்தை ஏந்தியபடி நாடாளுமன்ற வளாகத்திற்கு வெளியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, அக்கட்சியின் முன்னாள் தலைவர்கள் திருமதி சோனியா காந்தி, திரு ராகுல்காந்தி உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

[]<<<>>>[]

12-வது பாஸ்போர்ட் சேவை தினம் இன்று கொண்டாடப்படுகிறது.,

இதனையொட்டி வெறியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், இந்த சேவையானது குறிப்பிட்ட கால வரையறை, நம்பகத்தன்மை, மக்கள் அதனை எளிதான பெறுவதற்கான நடைமுறை, வெளிப்படைத் தன்மையுடன் சிறப்பாக செயல்பட்டு வருவதாகக் கூறியுள்ளார்.

கடந்த ஆண்டு மட்டும் ஒரு கோடியே 65 லட்சம் பாஸ்போர்ட் சேவைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் இதன் வளர்ச்சி 15 சதவீதம் அதிகரித்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாஸ்போர்ட்டுகளை எளிதாக பெறும் வகையில் 440 தபால் நிலையங்களில் இந்த சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

187 நாடுகளில் உள்ள பாஸ்போர்ட் வழங்கும் மையங்களில் இந்த சேவை சிறப்பாக நடைபெற்று வருவதாகவும் திரு ஜெய்சங்கர் சமூக வலைதளப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

மூத்த குடிமக்களுக்கு இலவச மருத்துவக் காப்பீட்டு அட்டைகள் மத்திய அரசால் வழங்கப்படுவதாக சமூக வலைதளத்தில் வெளியாகி வரும் செய்திகள் தவறானது என்று மத்திய சுகாதார அமைச்சகம் விளக்கம் அளித்துள்ளது.,

இதுவரை இது தொடர்பாக எந்தவித அறிவிப்பும் வெளியிடப்படவில்லை என்றும் அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் தாக்கல் செய்யப்பட்ட வேட்மனுக்கள் இன்று பரிசீலினைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

இந்த இடைத்தேர்தலில் போட்டியிட மொத்தம் 64 வேட்பாளர்கள் மனு தாக்கல் செய்துள்ளனர்.

மனுக்களை விலக்கிக் கொள்ள நாளை மறுநாள் கடைசி நாளாகும்.

அன்றைய தினம் இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும்,

வாக்குப்பதிவு அடுத்த மாதம் பத்தாம் தேதி நடைபெறுகிறது.,

வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் 13-ஆம் தேதி மேற்கொள்ளப்படுகிறது.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் சாலை மேம்பாட்டுப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று விதி 110-ன் கீழ் அறிக்கை தாக்கல் செய்து பேசிய அவர். கடந்த இரண்டு ஆண்டுகளில் பத்தாயிரம் கீலோமீட்டர் தூர கிராம சாலைகளை மேம்படுத்த நாலாயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும், இதில் எட்டாயிரத்து 120 கிலோமீட்டர் நீள சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

கடந்த மூன்று ஆண்டுகளில் மொத்தம் 16 ஆயிரத்து 596 கிலோமீட்டர் நீளம் உள்ள சாலைகள் மற்றும் 425 உயர்மட்ட பாலங்கள் அமைக்க திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அடுத்த இரண்டு ஆண்டுகளில் முதலமைச்சரின் கிரா சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் மூலம் பத்தாயிரம் கிலோமீட்டர் நீளம் உள்ள ஊரக சாலைகள் நாலாயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் என்றும் திரு மு க ஸடாலின் குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

கள்ளக்குறிச்சி கள்ளச்சாராயம் சம்பவம் தொடர்பாக அஇஅதிமுக சார்பில் இன்று தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கள்ளக்குறிச்சியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிச்சாமி பங்கேற்றார்.

அப்போது பேசிய அவர், இந்த கள்ளச்சாராய உயிரிழப்புகளுக்கு முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தார்மீக பொறுப்பேற்று பதவி விலக வேண்டுமென்று கூறினார்.

இந்த துயரமான சம்பவம் மிகுந்த வேதனை அளிப்பதாக உள்ளது என்றும் திரு எடப்பாடி பழனிசாமி குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

பிஜேபி தமிழக தலைவர் திரு அண்ணாமலை, ஆளுநர் திரு ஆர் என் ரவியை இன்று சென்னையில் ஆளுநர் மாளிகையில் சந்தித்தார்.

இந்த சந்திப்பின் போது கள்ளக்குறிச்சி, கள்ளச்சாராயம் சம்பவம் தொடர்பாக ஆளுநரிடம் மனு ஒன்றை அவர் அளித்தார்.

திரு அண்ணாமலையுடன், தெலங்கானா முன்னாள் ஆளுநர் திருமதி தமிழிசை சௌந்தர்ராஜன் உள்ளிட்ட பிஜேபி-யின் மூத்த தலைவர்கள் சென்றனர்.

**[]<<<>>>[]**

ஜம்மு-கஷ்மீர் அமர்நாத் யாத்திரை வரும் 29-ஆம் தேதி தொடங்குகிறது.

இதையொட்டி பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனிடையே ஜம்மு-கஷ்மீரின் சுகாதாரத்துறை இயக்குநர் டாக்டர் முஸ்தக் அகமது ராக்தர் அங்குள்ள முகாம்களை பார்வையிட்டு தேவையான மருத்துவ வசதிகள் குறித்து ஆய்வு செய்தார்.

முகாம்களில் மருத்துவர்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் உள்ளிட்ட வசதிகள் குறித்து அவர் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

**[]<<<>>>[]**

ரஷ்யாவில் நேற்று நடைபெற்ற இரண்டு தாக்குதல் சம்பவங்களில் காவல்துறையைச் சேர்ந்த 15 பேர் உட்பட 17 பேர் உயிரிழந்தனர்.

இந்த துப்பாக்கி தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்ட ஆறு தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ரஷ்யாவின் வடக்கு **Caucausus** பகுதியில் உள்ள இரண்டு தேவாலயங்களில் குழுமியிருந்த மக்களை நோக்கி இந்த தீவிரவாதிகள் கண்மூடித்தனமாக சுட்டதாக ரஷ்யாவின் தேசிய தீவிரவாத எதிர்ப்புக் குழு தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

தெற்கு காஸா பகுதியில் உள்ள ரஃபாநகர் மீதான தீவிர தாக்குதல் முடிவுற்றதாகவும், ஆனால் ஹமாஸ் பிரிவினரை அந்த பகுதியிலிருந்து முற்றிலும் அகற்றும் வரை சண்டை தொடரும் என்று இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நேதன்யாகு தெரிவித்துள்ளார்.

லெபனான் எல்லைப்பகுதியில் ஹஸ்புல்லா அமைப்பினர் தாக்குதல் தொடுத்து வரும் நிலையில், அதனை எதிர்கொள்ளும் வகையில் இஸ்ரேல் படைகள் அப்பகுதியில் குவிக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

மேற்குதிசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக தமிழகம், புதுச்சேரியில் இன்று ஒருசில இடங்களில் இடி மற்றும் மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல் மாவட்டங்களின் மலைப் பகுதிகள் மற்றும் நீலகிரி மாவட்டத்தின் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும், நகரின் ஒருசில பகுதிகளில் மாலை மற்றும் இரவு வேளையில் இடி மற்றும் மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

**[]<<<>>>[]**

நாட்டில் தேர்வு முறை மீதான நம்பிக்கையை ஏற்படுத்த மத்திய அரசு கடந்த சில நாட்களாக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக பல்கலைக்கழக மானியக் குழு தலைவர் திரு **Jagadesh Kumar** தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாணவர்களின் எதிர்காலத்தைப் பாதுகாக்கும் வகையில் மத்திய அரசின் சமீபத்திய நடவடிக்கைகள் அமைந்துள்ளதாகக் கூறினார்.

தேர்வு முறையை வலுப்படுத்த பிரபல கல்வியாளர்களைக் கொண்டு குழு அமைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

அரசு எடுத்துள்ள நடவடிக்கை ஆக்கப்பூர்வமானது மட்டுமல்ல, தேவையான ஒன்று என்றும் தில்லி பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் யோகேஷ் சிங் தெரிவித்துள்ளார்.

மாணவர்களின் எதிர்காலத்தோடு விளையாட, எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதை இத்தகைய நடவடிக்கைகள் காட்டுவதாக அவர் கூறினார்.

அரசு மீது அனைவரும் நம்பிக்கை வைக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

**[]<<<>>>[]**

உலகக்கோப்பை டுவெண்ட்டி - டுவெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் சூப்பர்-8 சுற்றில் இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

இப்போட்டி செயிண்ட் லூசியாவில் இந்திய நேரப்படி இரவு எட்டு மணிக்கு தொடங்குகிறது.

இதுவரை தோல்வியே சந்திக்காத இந்திய அணி புள்ளிகள் பட்டியலில் நான்கு புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது.

***End of News***